# 0.5பிரிவின் அல்லது விவாகரத்தின் பின்னர் இடம் பெயர்கிறீர்களா?

“பாதுகாவல்,” “அணுகுதல்” என்பன தொடர்பானவையாக இருந்த *விவாகரத்துச் சட்டத்திலுள்ள* பெற்றோர் நிலைச் சட்டங்கள் மாறியுள்ளன. ஆயினும், இம்மாற்றங்கள் 2021 மார்ச்சு 1 வரை **பொருந்துவதில்லை**. அது வரை, தற்போதைய சட்டம் பொருந்துகிறது.

இப்பக்கத்தில் 2021 மார்ச்சு 1 இன் பின்னரான இடப்பெயர்வுகளுக்குப் பொருந்தும் புதிய சட்டங்களைப் பற்றிய தகவல்கள் உள்ளன.

புதிய *விவாகரத்துச் சட்டத்தில்* பெற்றோர் பின்வருவனவற்றைத் திட்டமிடும் போதான நிலைமைகளில் விவாகரத்தான அல்லது விவாகரத்தாகும் பெற்றோருக்கும் குடும்ப நீதி நிபுணர்களுக்கும் நீதிமன்றங்களுக்கும் வழிகாட்ட ஒரு சட்டகம் உள்ளது

- அவர்களின் பிள்ளையை இடம் பெயர்த்தல் **அல்லது**
- அவர்களின் பிள்ளையிலிருந்து அப்புறம் இடம் பெயர்தல்

பின்வருவனவற்றைப் பற்றிய விதிகள் காணப்படுகின்றன:

- ஒரு பெற்றோர் இடம் பெயரத் திட்டமிடும் போது பின்பற்ற வேண்டிய புதிய படிமுறைகள்
- ஒரு நீதிமன்றம் ஒரு பிள்ளை இடம் பெயர முடியுமா முடியாதாவெனத் தீர்மானிக்கப் போகும் முறை.

இவ்விதிகள் பெற்றோருக்கு இடம் பெயர்தலைப் பற்றிய இணக்கங்களுக்கு வர அல்லது முடியுமானவிடத்து நீதிமன்றத்துக்குச் செல்வதைத் தவிர்க்க உதவவாகும்.

## இப்பக்கத்தில்

**ஒரு “இடம் பெயர்தல்” என்றால் என்ன?**
**நீங்கள் ஒரு இடப்பெயர்வுத் திட்டத்தைப் பற்றி அறிவித்தல் வழங்க வேண்டியது எப்போது**
**நீங்கள் யாருக்கு அறிவித்தல் வழங்க வேண்டும்**
**அறிவித்தலில் எது கூறப்பட வேண்டும்**
**நீங்கள் உங்களதோ உங்கள் பிள்ளையினதோ பாதுகாப்பைப் பற்றி அஞ்சுகிறீர்களாயின் அறிவித்தலுக்கான விதிவிலக்குகள்**

**இடப்பெயர்வு அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னர் யாது நிகழும்**
**ஒரு நீதிமன்றம் ஒரு பிள்ளை இடம் பெயர முடியுமா முடியாதாவெனத் தீர்மானிக்கப் போகும்**
**பெற்றோர் நிலைக் காலத்தைப் பயன்படுத்துவதற்கான பயணச் செலவுகள்**

## ஒரு “இடம் பெயர்தல்” என்றால் என்ன?

ஒரு “இடப்பெயர்வு” எனக் கருதப்படுவது எல்லாப் பெயர்வுகளுமல்ல. பெற்றோர் நிலைப் பொறுப்புக்களைக் கொண்ட ஒருவர் அல்லது பிள்ளை இடம் பெயர்தல் பிள்ளையின் உறவுகளைக் கருதத்தக்க ஒரு வழியிற் பாதிக்குமா என்பதைப் பொறுத்து *விவாகரத்துச் சட்டம்* வேறுபட்ட விதிகளைக் கொண்டுள்ளது.

பொதுவாக ஒரு “**இடப்பெயர்வு**” என்றால் பெயர்வின் காரணமாகப் பிள்ளைக்கான பெற்றோர் நிலை நேரசூசி அதன் மேலும் செயற்படாது என்று பொருள். உதாரணமாக, ஒரு பெற்றோர் தனது பிள்ளையுடன் நியூபவுன்லாந்திலிருந்து ஒந்தாரியோவுக்கு நகர்வது பொதுவாக ஒரு இடப்பெயர்வாகக் கருதப்படுகிறது. ஒரு பெற்றோர் தனது பிள்ளையிலிருந்து தூரமாக நியூபவுன்லாந்திலிருந்து ஒந்தாரியோவுக்கு நகர்வதும் ஒரு இடப்பெயர்வாகக் கருதப்படுகிறது. இது பெற்றோரின் புதிய வீட்டுக்கும் பிள்ளையின் தற்போதைய வீட்டுக்கும் இடையிலான தொலைவினதும் அது பெற்றோர் நிலைக் கால நேரசூசியைப் பாதிக்கும் முறையினதும் காரணமாகவாகும்.

> **நினைவிற் கொள்ளுங்கள்: 2021 மார்ச்சு 1 இன் பின்னர் “பாதுகாப்பு,” “அணுகல்” ஆகிய பதங்கள் *விவாகரத்துச் சட்டத்தில்* அதன் மேலும் பயன்படுத்தப்பட மாட்டா. இம்மெய்யறிக்கை (வலைப்பக்கம்) “பெற்றோர் நிலைப் பொறுப்புக்களைக்” குறிப்பிடும் போது அது “பாதுகாத்தல்,” “அணுகல்” ஆகிய இரு பழைய கட்டளைகளையும், அங்ஙனமே “பெற்றோர் நிலைக் காலம்,” “தீர்மானமெடுத்தற் பொறுப்புக்கள்” ஆகியவற்றுக்கு வழி செய்யும் புதிய பெற்றோர் நிலைக் கட்டளைகளையும் உள்ளடக்குகின்றது.**

ஒவ்வொரு நிலைமையையும் பிள்ளையின் மீதான தாக்கத்தையும் பார்ப்பது முக்கியம். பெற்றோர் நிலை நேரசூசியில் ஒரு கருதத்தக்க

தாக்கம் இருக்குமாயின், சில வேளைகளில் ஒரு குறுகிய தொலைவும் ஒரு “இடப்பெயர்வு” எனக் கருதப்படலாம்.

## நீங்கள் ஒரு இடப்பெயர்வுத் திட்டத்தைப் பற்றி அறிவித்தல் வழங்க வேண்டியது எப்போது

உங்களுக்கு *விவாகரத்துச் சட்டத்தின் கீழ்* பெற்றோர் நிலைப் பொறுப்புக்களுக்கான ஒரு நீதிமன்றக் கட்டளை இருந்தால், நீங்கள் உங்கள் இடம் பெயர்தல் திட்டத்தைப் பற்றிய அறிவித்லை வழங்க வேண்டும்.

நீங்கள் உங்கள் பிள்ளையுடன் பிள்ளையின்றி இடம் பெயரத் திட்டமிடுகிறீர்களாயினும் நீங்கள் அறிவித்தல் வழங்க வேண்டும்.

## நீங்கள் யாருக்கு அறிவித்தல் வழங்க வேண்டும்

நீங்கள் இடப்பெயர்வுக்கான உங்கள் திட்டத்தைப் பற்றி அறிவித்தல் வழங்க வேண்டியவர்:

- பெற்றோர் நிலைப் பொறுப்புக்களைக் கொண்ட ஒருவர்
- ஒரு தொடர்புக் கட்டளையின் கீழ் தொடர்பைக் கொண்ட ஒருவர்

பெற்றோர் நிலையும் தொடர்புக் கட்டளைகளும் தொடர்பான மேலும் தகவல்களுக்காக பிபிரிவின் அல்லது விவாகரத்தின் பின்னர் பெற்றோர் நிலை ஏற்பாடுகள் மெய்யறிக்கையில் ஆலோசனை பெறுங்கள்.

## அறிவித்தலில் எது கூறப்பட வேண்டும்

### ஒரு இடப்பெயர்வல்லாத பெயர்வு

இடம் பெயர்தல் ஆட்களுடன் பிள்ளையின் உறவுகளில் ஒரு கருதத்தக்க தாக்கத்தைக் கொண்டிருக்க மாட்டாதெனின், உதாரணமாக, உங்கள் நகரினுள் அல்லது மாநகரினுள்ளான பெரும்பாலான பெயர்வுகளுக்கு, நீங்கள் அடுத்த ஆளுக்கு அல்லது ஆட்களுக்குத் தெரிவித்தாக வேண்டியவை:

- நீங்கள் இடம் பெயரும் திகதி
- உங்கள் புதிய முகவரி
- உங்கள் புதிய தொடர்புத் தகவல்கள்

இது பெற்றோர் நிலைப் பொறுப்புக்களை அல்லது ஒரு தொடர்புக் கட்டளையைக் கொண்ட அடுத்தவர்கள் பிள்ளை வாழ்வது எங்கே என்றும் பிள்ளையை எங்கிருந்து அழைத்துச் செல்லவும் கொண்டு வந்து விடவும்வேண்டும் என்றும் அறிந்து கொள்ளவாகும்.

**நினைவிற் கொள்ளுங்கள்: இடம் பெயர்தல் பெற்றோர் நிலை நேரசூசியில் ஒரு கருதத் தக்க தாக்கத்தைக் கொண்டிருக்கும் சாத்தியமிருப்பின், இது ஒரு இடப்பெயர்வாகும் என்பதால், நீங்கள் ஒரு இடப்பெயர்வுக்கான அறிவித்தல் விதிகளைப் பின்பற்றியாக வேண்டும்.**

### ஒரு இடப்பெயர்வாகும் பெயர்வு

இடம் பெயர்தல் அறிவித்தலைப் பெறும் ஆட்களுடனான பிள்ளையின் உறவுகளில் ஒரு கருதத்தக்க தாக்கத்தைக் கொண்டிருக்குமாயின், உதாரணமாக பெற்றோர் நிலை நேரசூசி அதன் மேலும் செயற்படாது, அப்போது அது ஒரு "இடப்பெயர்வு" ஆவதுடன், *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் நீங்கள் இடப்பெயர்வு விதிகளைப் பின்பற்றியாக வேண்டும்.

நீங்கள் இடம் பெயரத் திட்டமிடுகிறீர்களாயின், நீங்கள் செய்தாக வேண்டியவை:

- இடம் பெயரக் குறைந்த பட்சம் 60 நாட்களுக்கு முன்னர் அறிவித்தல் வழங்குதல்
- இடம் பெயர்வதைப் பற்றிக் குறிப்பான விபரங்களை வழங்குதல். **இடப்பெயர்வு அறிவித்தல்** (insert link for form when available) படிவம் நீங்கள் அறிவித்தலில் உள்ளடக்கியாக வேண்டிய எல்லாத் தகவல்களையும் காட்டுகிறது. இப்படிவம் பின்வருவனவற்றைப் பற்றிய தகவல்களைக் கேட்கிறது:
  - இடம் பெயர்தல் எப்போது இடம் பெறும்
  - உங்கள் புதிய முகவரி
  - உங்கள் தொடர்புத் தகவல்கள்
  - இடப்பெயர்வு நிகழுமாயின், அறிவித்தலைப் பெறுவோருடனான பிள்ளையின் உறவுகளுக்கு ஆதரவளிக்க உதவ பெற்றோர் நிலையினதும் ஏதேனும் தொடர்பினதும் நேரசூசியை எவ்வாறு மாற்றலாமென நீங்கள் கருதுகிறீர்கள்

**நினைவிற் கொள்ளுங்கள்: ஒரு பெற்றோர் தமது பிள்ளையின்றி இடம் பெயர்ந்தாலும், அப்போதும் ஒரு இடப்பெயர்வு அறிவித்தல் தேவையாகும். இது இடம் பெயர்தல் அப்பெற்றோருடனான பிள்ளையின் உறவில் ஒரு கருதத்தக்க தாக்கத்தைக் கொண்டிருக்கலாம் என்பதாலாகும்.**

## நீங்கள் உங்களின் பாதுகாப்பை அல்லது உங்கள் பிள்ளையின் பாதுகாப்பைப் பற்றி அஞ்சுகிறீர்களாயின் அறிவித்தலுக்கான விதிவிலக்குகள்

நீங்கள் உங்களதோ உங்கள் பிள்ளையினதோ பாதுகாப்பைப் பற்றி அஞ்சுகிறீர்களாயின், நீங்கள் அறிவித்தல் விதிகளில் ஒரு மாற்றத்தைச் செய்யுமாறு நீதிமன்றத்திடம் கேட்கலாம். நீங்கள் அடுத்த தரப்புக்கு (வழமையாக அடுத்த பெற்றோருக்கு)க் கூறாமலேயே நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

*விவாகரத்துச் சட்டம்* அறிவித்தல் விதிகளில் ஒரு மாற்றம் அனுமதிக்கப்படக் கூடிய ஒரு நிலைமைக்கு உதாரணமாகக் குடும்ப வன்முறையைக் குறிப்பிடுகிறது. நீங்கள் அறிவித்தல் விதிகளுக்கு ஒரு விதிவிலக்கை வேண்ட உதவியாக, நீதிமன்றத்துக்கு (911 அழைப்புக்கள், பொலிஸ் அறிக்கைகள், ஒளிப்படங்கள் போன்ற) குடும்ப வன்முறை தொடர்பான சான்று தேவைப்படும்.

## இடப்பெயர்வு அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னர் யாது நிகழும்

### ஒரு இணக்கத்துக்கு வர முயன்று கொண்டிருங்கள்

*விவாகரத்துச் சட்டம்* பெற்றோர் பேச்சுவார்த்தையும் இணக்கமாக்கலும் பொருத்தமானதாக இருந்தாலே தவிர அவை போன்ற நீதிமன்றத்துக்குப் புறம்பான குடும்பத் தகராறு தீர்த்தற் செயன்முறைகளைப் பயன்படுத்தி ஒரு பிள்ளையின் ஏற்படக்கூடிய இடப்பெயர்வு உட்பட தமது பிள்ளைகள் தொடர்புபடும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முயல வேண்டுமென எதிர்பார்க்கிறது. நீங்கள் உங்கள் பிள்ளைகளைச் சிறப்பாக அறிவீர்கள் என்பதால், பொதுவாக பெற்றோர் தமது சொந்தத் தீர்வை ஏற்படுத்திக்

கொள்வது சாலச் சிறந்தது. ஒரு நீதிபதி உங்களில் ஒருவரோ இருவருமோ விரும்பாத ஒரு தீர்ப்பையும் மேற்கொள்ளலாம்.

ஒரு இடம் பெயர்தல் பிள்ளையின் சிறந்த நலன்களைக் கருதியதா என்பதைப் பற்றிக் கலந்துரையாடும் போது சிந்திக்க வேண்டிய பின்வருவன உள்ளடங்கலாகப் பல காரணிகள் இருக்கின்றன:

- இடம் பெயர்தல் நிகழ்ந்தால், கோடைகாலத்திலும் ஏனைய பாடசாலை விடுமுறைகளின் போதும் மேலதிக பெற்றோர் நிலைக் காலம் போன்று, இடம் பெயராத பெற்றோருக்காகச் சற்று பெற்றோர் நிலைக் காலத்தை உருவாக்க வழிகள் உள்ளனவா?
- பிள்ளையின் வயது அதிகரிக்கும் வரை இடம் பெயர்தலை ஒத்தி வைக்க முடியுமா?
- அடுத்த பெற்றோரும் புதிய இடத்துக்கு இடம் பெயர முடியுமா?
- இடம் பெயர்தல் ஒரு பெற்றோரின் புதிய துணைவருடன் சேர்வதற்கானதாக இருந்தால், பெற்றோர் நிலை நேரசூசியை மாற்றத் தேவைப்படாதிருக்கும் வகையில் துணைவர் அதற்குப் பதிலாக பிள்ளையின் தற்போதைய வசிப்பிடத்துக்கு இடம் பெயர முடியுமா?

**பெற்றோரிருவரும் பிள்ளையின் இடப்பெயர்வுக்கு இணங்கினால், எதிர்ப்போ நீதிமன்ற விண்ணப்பமோ தேவையில்லை.**

பிள்ளையுடன் இடம் பெயரத் திட்டமிட்டவர் பின்வரும் நிலைகளில் அறிவித்தலில் குறிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதன் பின்னர் முன்னகர **முடியும்**:

1) இடப்பெயர்வு அறிவித்தலைப் பெற்ற பெற்றோர் நிலைப் பொறுப்புக்களைக் கொண்ட அடுத்தவர் அறிவித்தலைப் பெற்று 30 நாட்களுக்குள் பிள்ளையின் இடம் பெயர்தலை எதிர்க்காமல் இருத்தல், <u>அத்துடன்</u>
2) இடம் பெயர்தல் நிகழ முடியாதெனக் கூறும் நீதிமன்றக் கட்டளை எதுவும் இல்லாதிருத்தல்.

*விவாகரத்துச் சட்டம்* அதைத் தேவைப்படுத்தாத போதிலும், ஒரு இற்றையாக்கிய நீதிமன்றக் கட்டளையில் ஒரு புதிய பெற்றோர் நிலை

நேரசூசியையும் வசிப்பிடத்தையும் கொண்டிருப்பது ஒரு நல்ல விடயமாகும். நீங்களும் பெற்றோர் நிலைப் பொறுப்புக்களைக் கொண்ட அடுத்தவரும் இணங்கினால், இணக்கத்தை ஒரு நீதிமன்றக் கட்டளையில் ஒப்பீட்டளவில் எளிதாகப் போட்டுக் கொள்ளலாம். நீங்கள் நீதிமன்றக் கட்டளையை இற்றைப்படுத்தாவிட்டால், அது பாடசாலைகளிலும் ஏனைய அதிகாரிகளிடமும் சிரமங்களை ஏற்படுத்தக் கூடிய அதே வேளை, தேவைப்படின், புதிய ஏற்பாட்டை நடைமுறைப்படுத்துவது சிரமமாகலாம்.

**நீங்கள் உங்கள் பிள்ளையை இடப் பெயர்க்கும் திட்டத்துடன் இணங்காவிட்டால், நீங்கள் எதிர்க்கக்கூடிய இரு வழிகள் உள்ளன**

நீங்கள் உங்கள் பிள்ளையை இடம் பெயர்க்கும் திட்டத்துடன் இணங்காதிருந்து, உங்களால் பெற்றோர் நிலைப் பொறுப்புக்களைக் கொண்ட அடுத்தவருடன் ஒரு இணக்கத்துக்கு வர முடியாவிட்டால், உங்களுக்கு **நீங்கள் அறிவித்தலைப் பெற்ற பின்னர் எதிர்ப்பதற்கு 30 நாட்கள்** உள்ளன.

எதிர்க்க இரு வழிகள் உள்ளன:

1. நீங்கள் அடுத்தவருக்கு உங்கள் எதிர்ப்பைப் பற்றிய குறிப்பான விபரங்களை வழங்கி எதிர்க்கலாம். **இடப்பெயர்வை எதிர்த்தல்** படிவம் நீங்கள் உங்கள் எதிர்ப்பில் உள்ளடக்கியாக வேண்டிய எல்லாத் தகவல்களையும் உங்களுக்குக் காட்டுகிறது; அல்லது
2. நீங்கள் இடப்பெயர்வை நிறுத்துமாறு நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்

எதிர்ப்புக்களைப் பற்றிய இரு குறிப்புக்கள்:

1. உங்கள் **பிள்ளையை** இடம் பெயர்க்கும் திட்டத்தை எதிர்ப்பது மாத்திரமே சாத்தியம்; ஒரு பெற்றோர் மறு பெற்றோரின் இடம் பெயரும் திட்டத்தை எதிர்க்க முடியாது.

2. பெற்றோர் நிலைப் பொறுப்புக்களைக் கொண்ட ஒருவர் மாத்திரமே எதிர்க்கலாம். ஒரு தொடர்புக் கட்டளையைக் கொண்ட ஒருவர் ஒரு பிள்ளையை இடம் பெயர்க்கும் திட்டத்தை எதிர்க்க முடியாது. ஆயினும், அவர் இடப்பெயர்வு அனுமதிக்கப்படின் ஒரு தொடர்புக் கட்டளையை மாற்றுமாறு கேட்கலாம்.

நீங்கள் எதிர்த்ததும், ஒரு நீதிபதி அது பிள்ளையின் சிறந்த நலன்களைக் கருத்திற் கொள்வதாகத் தீர்மானிக்கும் வரை இடப்பெயர்வு நிகழ முடியாது.

**இடப்பெயர்வை எதிர்த்தல்** படிவம் உங்களிடம் பின்வருவனவற்றை விளக்குமாறு கூறுகிறது:

- நீங்கள் இடப்பெயர்வை எதிர்க்கின்றமை
- நீங்கள் ஏன் எதிர்க்கிறீர்கள்
- பெற்றோர் நிலைக் காலம், தொடர்பு, தீர்மானமெடுத்தற் பொறுப்பு என்பவற்றுக்கான முன்மொழிவைப் பற்றிய உங்கள் கண்ணோட்டங்கள்

நீங்கள் ஒரு **இடப்பெயர்வை எதிர்த்தலைப்** பெற்றால், அல்லது இடப்பெயர்வை எதிர்க்கும் ஒரு நீதிமன்ற விண்ணப்பம் கோப்பிடப்பட்டிருந்தால், **நீதிமன்றம் இடம் பெயர்தலை அனுமதிக்கும் ஒரு கட்டளையைப் பிறப்பிக்கும் வரை நீங்கள் பிள்ளையை இடம் பெயர்க்க முடியாது**.

## ஒரு நீதிமன்றம் ஒரு பிள்ளை இடம் பெயர முடியுமா முடியாதாவெனத் தீர்மானிக்கப் போகும்

நீதிமன்றம் பிள்ளையின் சிறந்த நலன்களைக் கருதி ஒரு பிள்ளையை இடம் பெயர்க்க முடியுமா அல்லவா என்பதைத் தீர்மானிக்கும்.

### பிள்ளையின் சிறந்த நலன்கள் எனும் காரணிகள்

நீதிமன்றம் பிள்ளையின் சிறந்த நலன்களைத் தீர்மானிக்கக் கருத்திற் கொள்ளும் பல காரணிகள் இருக்கின்றன (பெற்றோர் நிலை ஏற்பாடுகள் மெய்யறிக்கையைப் பாருங்கள்). நீதிமன்றம் ஒரு இடப்பெயர்வு வழக்கிற் பார்த்தாக வேண்டிய வேறு காரணிகளும் இருக்கின்றன.

தனிக் காரணியெதுவும் வழக்கைத் தீர்மானிக்காது, நீதிமன்றம் உங்கள் நிலைமையில் ஒவ்வொன்றும் எப்படிப் பொருந்துகிறது என்பதைப் பார்க்கும்.

ஒரு இடப்பெயர்வு வழக்கில், நீதிமன்றம் பார்க்கப் போகும் மேலதிகக் காரணிகளாவன:

1. **இடப்பெயர்வுக்கான காரணம்** – நீதிமன்றம் ஒரு இடம் பெயர்தல் திட்டம் ஏன் இருக்கிறதென அறிய விரும்பும். உதாரணமாக, அது ஒரு புதிய வேலைக்காகவா, ஒரு புதிய துணைவருடன் இருக்கவா, அல்லது பிள்ளை ஒரு குறிப்பான பாடசாலைக்குச் செல்வதற்காகவா?

2. பிள்ளையின் மீது **இடப்பெயர்வின் தாக்கம்** – உதாரணமாக, தற்போதைய சமுதாயத்துக்கும் முன்மொழியப்படும் புதிய சமுதாயத்துக்கும் பிள்ளையின் தொடர்புகள் யாவை?

3. ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளையுடன் கொண்டிருக்கும் **பெற்றோர் நிலைக் காலமும் ஈடுபாடும்** – உதாரணமாக, நீதிமன்றம் பிள்ளைக்கு இரு பெற்றோருடனும் சமமாக வலுவான உறவுகள் உள்ளனவா, அல்லது ஒரு பெற்றோர் பிள்ளையுடன் மிகச் சிறிதளவு ஈடுபாட்டையே கொண்டிருக்கிறாரா என்பதை அறிய விரும்பும்.

4. **இடப்பெயர்வைத் திட்டமிடுபவர் அறிவித்தல் விதிகளைப் பின்பற்றியுள்ளாரா என்பது** – நீதிமன்றம் இடம் பெயர்தல் நன்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்றும் அடுத்த பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டு முன்மொழிவுக்குப் பதிலளிக்க ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாவென அறிய விரும்பும். நீங்கள் இவ்விதிகளைப் பின்பற்றாவிட்டால், நீதிமன்றம் அதனை மறையாகப் பாக்கலாம்.

***நினைவிற் கொள்ளுங்கள்:*** நீதிமன்றம் குடும்ப வன்முறை இருந்துள்ளது போன்ற சிற்சில வழக்குகளில் அறிவித்தல் விதிகளுக்கு விலக்குகளைச் செய்யலாம்.

5. ஒரு பிள்ளை ஒரு குறிப்பான இடத்தில் வாழ வேண்டுமெனக் கூறும் **ஒரு நீதிமன்றக் கட்டளை, இணக்கம் அல்லது நடுவர் தீர்ப்பு காணப்படுகிறதா என்பது**. உதாரணமாக, நீங்களும் அடுத்த பெற்றோரும் பிள்ளை தொடர்ந்தும் ஒரு குறிப்பிட்ட நகரில் வசித்தாக வேண்டுமெனக் கூறும் ஒரு பிரிவு ஒப்பந்தத்தைக் கொண்டிருந்தால், நீதிமன்றம் இக்காரணியைப் பற்றிப் பார்க்கும்.

> ஒரு **நடுவர் தீர்ப்பு** என்பது ஒரு நடுவரால் (வாழ்க்கைத் துணைகள் தமக்காக ஒரு தீர்ப்பை மேற்கொள்ளலாமென இணங்கியுள்ள, ஒரு நீதிபதியல்லாத ஒருவர்) மேற்கொள்ளப்படும் ஒரு தீர்ப்பாகும். மாகாணச் சட்டங்கள் ஒரு குடும்பச் சட்ட வழக்கில் யார் நடுவராகலாம் என்பதைத் தீர்மானிக்கின்றன.

6. **பெற்றோர் நிலை ஒப்பந்தத்தை மாற்றுவதற்கான முன்மொழிவு நியாயமானதா என்பது**. நீதிமன்றம் பிள்ளையின் முன்மொழியப்படும் புதிய வீட்டின் அமைவிடத்தையும், இடம் பெயராத பெற்றோருக்கு ஒன்றாகக் காலம் கழிப்பதற்காகப் பிள்ளையின் புதிய இடத்துக்குப் பயணம் செய்வது எவ்வளவு சாத்தியமானதும் செலவானதும் என்பவற்றையும் பார்க்கும். நீதிமன்றம் பிள்ளை தனது பழைய வசிப்பிடத்துக்குத் திரும்பிச் செல்வது எவ்வளவு எளியது என்பதையும் பார்க்கும். பிள்ளைகளின் பயணத்தைப் பற்றிய விமானச் சேவை, தொடருந்து, பேருந்து விதிகளுடன் சேர்த்து ஒரு பிள்ளையின் வயது, ஆளுமை ஆகிய யாவையும் பற்றிச் சிந்திப்பது முக்கியம்.

7. **பெற்றோர் தமது குடும்பச் சட்டக் கட்டளைகளுக்கும் இணக்கங்களுக்கும் நடுவர் தீர்ப்புக்களுக்கும் கீழ்ப்படிகிறார்களா என்பது.** உதாரணமாக, ஒரு நீதிமன்றம் ஒரு இடம் பெயர்தலை முன்மொழியும் ஒரு பெற்றோருக்குக் கடந்த காலத்தில் பெற்றோர் நிலைக் காலம் மறுக்கப்பட்டிருந்ததா என்பதை அறிய விரும்பலாம். இது எதிர்காலப் பிரச்சினைகளை எதிர்வுகூறலாம். நீதிமன்றம் இடம் பெயர்தலை விரும்பாத பெற்றோர் கடந்த காலத்தில் தனது பெற்றோர் நிலைக் காலத்தைப் பயன்படுத்தத் தவறியிருக்கிறாரா அல்லது பிள்ளை ஆதரவுப் பணத்தை வழங்காமல் அடுத்த பெற்றோரை நிதி நெருக்கடியில் இட்டுள்ளாரா என்பதையும் அறிய விரும்பக் கூடும்.

## இடப்பெயர்வு பிள்ளையின் சிறந்த நலன்களைக் கருதியதா என்பதை எண்பிக்க வேண்டியவர் யார்

*விவாகரத்துச் சட்டம்* பிள்ளைக்கான நிலைப்பை ஊக்குவிக்கவும் இடப்பெயர்வு வழக்குகள் எப்படித் தீர்க்கப்படும் என்பதைப் பற்றித் தரப்பினருக்கு வழிகாட்டலை வழங்கவும் வேறு இரு விதிகளைக் கொண்டுள்ளது.

### சமமான பெற்றோர் நிலைக் காலம்

இரு பெற்றோர்களும் பிள்ளையுடன் **கணிசமானளவு சமமான பெற்றோர் நிலைக் காலத்தை** (பிள்ளையைப் பராமரிப்பதில் கிட்டத்தட்ட சமமான பொறுப்பை)க் கொண்டிருந்தால், பிள்ளையுடன் இடம் பெயரத் திட்டமிடுபவர் இடம் பெயர்தல் பிள்ளையின் சிறந்த நலன்களில் உள்ளதற்கான சாத்தியங்களின் சமனிலையை (அதாவது அப்படி இல்லாதிருப்பதை விட அவ்வாறிருப்பது சிறந்தது என்று) எண்பித்தாக வேண்டும்.

### தெளிவான முதன்மைப் பராமரிப்பாளர்

பிள்ளையுடன் இடம் பெயரத் திட்டமிடுபவருக்கு பிள்ளையுடன் **மிகப் பெருமளவு பெற்றோர் நிலைக் காலம்** இருக்குமாயின், அடுத்த பெற்றோர் இடம் பெயர்தல் பிள்ளையின் சிறந்த நலன்களில் இல்லை என்பதற்கான சாத்தியங்களின் சமனிலையை (அதாவது அப்படி இல்லாதிருப்பதை விட அவ்வாறிருப்பது சிறந்தது என்று) எண்பித்தாக வேண்டும்.

இவ்விரு விதிகளும் பின்வரும் நிலைகளில் மாத்திரமே பொருந்துகின்றன:

- பெற்றோர் நிலை ஏற்பாடு ஒரு நீதிமன்றக் கட்டளையில், ஒப்பந்தத்தில் அல்லது நடுவர் தீர்ப்பிற் குறிக்கப்பட்டிருத்தல், அத்துடன்
- பெற்றோர் அதற்குக் கீழ்ப்படிதல்.

இது இவ்வழக்குகளில் ஒரு நீதிமன்றம் அல்லது பெற்றோர்கள் பிள்ளையின் சிறந்த நலன்களில் இருப்பது யாதென்று தீர்மானித்திருக்கும் அதே வேளை, தற்போது ஒருவர் அவ்வாழ்க்கை ஏற்பாட்டுக்கு மாற்றத்தை முன்மொழிகிறார் என்பதாலாகும்.

## பெற்றோர் நிலைக் காலத்தைப் பயன்படுத்துவதற்கான பயணச் செலவுகள்

ஒரு இடப்பெயர்வு நிகழுமாயின், பிள்ளையும் இடம் பெயராத பெற்றோரும் ஒன்றாக இருப்பதற்காக விமான அல்லது தொடருந்துப் பயணமும் விடுதிகளும் போன்ற செலவுகளைக் கொண்ட பயணங்களை மேற்கொள்ளத் தேவைப்படலாம்.

*விவாகரத்துச் சட்டம்* நீதிமன்றத்துக்கு இச்செலவுகள் பெற்றோருக்கிடையில் பகிரப்பட வேண்டுமா என்பதையும் அது எவ்வாறு என்பதையும் பற்றி ஒரு கட்டளையை இட அனுமதிக்கிறது.

தொடர்புள்ள தொடுப்புக்கள்

- திட்டங்களை ஏற்படுத்துதல்:பிரிவின் அல்லது விவாகரத்தின் பின்னர் பெற்றோர் நிலை ஏற்பாடுகளுக்கான ஒரு வழிகாட்டல்
- பெற்றோர் நிலைத் திட்டமிடல் சரிபார்ப்புப் பட்டியல்
- பெற்றோர் நிலைத் திட்டமிடல் கருவியை அணுகுதல்
- பெற்றோர் நிலை மெய்யறிக்கை
- விவாகரத்தும் குடும்ப வன்முறையும்
- குடும்பத் தகராறு தீர்த்தல்: நீதிமன்றத்துக்குப் புறம்பே குடும்பச் சட்டப் பிரச்சினைகளைத் தீர்த்தல்